மலேசிய நண்பன்
மக்கள் ஏடு
PP 11862/12/2008
MALAYSIA NANBAN
குடும்பம் 18 - நண்பன் 325 / திருவள்ளுவர் ஆண்டு 2039 / சர்வசித்து ஆண்டு பங்குனி 12
ஹிஜ்ரி 1429 ரப்யு அவ்வல் 17/ செவ்வாய்க்கிழமை 25-3-2008 / HARIAN TAMIL MALAYSIA NANBAN
வெள்ளி 1.00

சிலாங்கூர் ஆட்சிக் குழு உறுப்பினராக சேவியர் ஜெயக்குமார் நியமனம்

(ஜீ.பரந்தாமன்)

கிள்ளான், மார்ச் 25-

சிலாங்கூர் மாநிலத்தின் 10 ஆட்சிக்குழு உறுப்பினர்கள் நேற்று பதவியேற்றனர். ஸ்ரீ அண்டலாஸ் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சேவியர் ஜெயக்குமார் ஆட்சிக்குழு உறுப்பினராக சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் முன்னிலையில் பதவியேற்றார்.

சிலாங்கூர் மாநில சுகாதார, தோட்டத் தொழிலாளர், வறுமை, பரிவுமிக்க அரசாங்க குழுத் தலைவராக டாக்டர் சேவியர் நியமனம் செய்யப்பட்டார்.

கெ அடிலான் கட்சியைச் சேர்ந்த நால்வரும், பாஸ் கட்சியைச் சேர்ந்த மூவரும் ஐசெகவைச் சேர்ந்த மூவரும் ஆட்சிக்குழு உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

கெ அடிலான் கட்சி சார்பில் யாக்கோப் சபாரி, ரோட்சியா இஸ்மாயில், எலிசபெத் வோங், டாக்டர் சேவியர் ஜெயக்குமாரும், ஐசெக சார்பில் திரேசா கோக், ரோனி லியூ, இயன் யோங் ஹியன் வா என்பவரும், பாஸ் கட்சி சார்பில்

10ஆம் பக்கம் பார்க்க

ஊராட்சி மன்றங்களுக்கு தேர்தல்?

முன்னாள் அமைச்சர் இந்நாள் அமைச்சரிடம் பதவி ஒப்படைப்பு கடிதத்தை வழங்குகிறார்.

பொதுமக்கள் கருத்து அறியப்படும் -அமைச்சர் டத்தோ ஓங் விளக்கம்

கோலாலம்பூர், மார்ச் 25-

ஊராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது குறித்து பொதுமக்களின் கருத்துக்களை வீடமைப்பு, ஊராட்சி அமைச்சு சேகரிக்கவிருக்கிறது.

பொது மக்களின் கருத்துக்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என்று புதிய அமைச்சர் டத்தோ ஓங் கா சுவான் சொன்னார்.

கடந்த 40 ஆண்டு காலமாக ஊராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தப்படவில்லை. எனினும் இந்த விவகாரத்தில் பொதுமக்கள் கருத்துக்கள் கண்டறியப்படும். பொதுமக்களின் கருத்துக்கள் விரைந்து சேகரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்று நேற்று வீடமைப்பு, ஊராட்சி அமைச்சில் முதலாவது பத்திரிகையாளர் சந்திப்புக் கூட்டத்தில் அமைச்சர் தெரிவித்தார்.

டத்தோஸ்ரீ ஓங் கா திங் முன்பு வீடமைப்பு ஊராட்சி அமைச்சராக பதவி வகித்தார். இந்த பதவிக்குத் தற்போது இவரின் அண்ணன் ஓங் கா சுவான் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய முன்னணி அரசாங்கம் இல்லாத மாநிலங்களில் ஊராட்சி மன்றங்களில் மாற்றம் வருமா என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், கண்டிப்பாக மாற்றம் வரும் என்றார்.

இருப்பினும் இதுபற்றி எங்களுக்குத் தெரியவில்லை. இந்த விவகாரத்தில் ஒருங்கிணைப்பு அவசியம். அமைச்சரவையிலும் விவாதிக்கப்பட வேண்டும்.

ஊராட்சி மன்றங்களில் எங்களுக்குத் தெரியவில்லை. இந்த விவகாரத்தில் மக்களுக்கு பாதிப்பாக இருக்காது என்றார் ஓங் கா சுவான்.

புக்கிட் ஜாலில் தமிழ்ப்பள்ளி பிரச்சினைக்கு தீர்வு

பூச்சோங், மார்ச் 25-

அடிக்கடி வெள்ளம் ஏற்படும் பூச்சோங், புக்கிட் ஜாலில் தமிழ்ப்பள்ளி பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று சுபாங் நாடாளுமன்ற உறுப்பினர் சிவராசா ராசையா உறுதியளித்தார்.

நேற்று பூச்சோங், புக்கிட்

10ஆம் பக்கம் பார்க்க

நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வாருங்கள்

மஇகாவை சாமிவேலு சாகடித்து விட்டார்

டத்தோ கோவிந்தராஜு சாடல்

(இ.எம்.முகமது அலி)

கோலாலம்பூர், மார்ச் 25-

மஇகாவை சாமிவேலு சாகடித்து விட்டார். தமக்கு பிறகு மஇகா செயல்படக் கூடாதென்று அவர் தொடர்ந்து செயல்படுவதாக மஇகாவின் மூத்த முன்னாள் உதவித் தலைவர் டத்தோ வீ.கோவிந்தராஜு நேற்று குற்றஞ்சாட்டினார்.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு, 62 ஆண்டு கால மஇகாவின் வரலாறு சாய்ந்துவிட்டது.

அதை மீண்டும் தூக்கி நிறுத்த சரியான தலைவர் மஇகாவில் இப்போது இல்லை.

எல்லாமே சாமிவேலு சரணம் என்று புகழ் பாடியே அவரின் பலவீனம் தெரியாமல் 28 ஆண்டுகள் அவரை ஆதரவாளர்கள் தலையில் தூக்கி வைத்து ஆடியதால் விழுந்த மரண அடியே இது என்று கோவிந்தராஜு மனம் திறந்து பேசினார்.

சுயநலவாதி கூட்டம் சாமிவேலுவை சுற்றி வளைத்ததால், அவரின் ஆட்டம் தொடர்ந்தது.

இப்போது மக்கள் சக்தி மூலமாக மக்கள் விழித்துக் கொண்டதால், மஇகாவில் சாமிவேலு பதவியில் இருக்கக்கூடாது என்று விரட்டுகிறது. அவரின் ஆட்டத்திற்கு சாவு மணி அடிக்கத் தொடங்கி விட்டனர்.

இது மக்களின் சரியான முடிவு என்று அவர் தெரிவித்தார்.

முதல் கட்டமாக சிலாங்கூர் மாநிலத்தில் 17 தொகுதி மஇகா தலைவர்கள் சாமிவேலு பதவி விலக வேண்டும் என்று நேற்று முன்தினம் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த அலை நாடு முழுவதும் தொடரும் என்று அவர் தெரிவித்தார்.

ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தும் சாமிவேலு பதவியை விட்டு போகாமல் அடம் பிடிப்பது சிறுபிள்ளைத்தனமான செயலாகும்.

அவருக்கு அரசியல் முதிர்ச்சி இல்லை என்பது தெரிகிறது.

மக்களின் எதிர்ப்பிலும் சாமிவேலு பதவியில் நீடித்தால், மஇகா கேலிக் கூத்து கட்சியாக அழிந்து போகும்

10ஆம் பக்கம் பார்க்க

மாவட்ட நகராண்மைக் கழகங்களில் பிரதிநிதித்துவம் தேவை

இந்தியர் வர்த்தகத் தொழிலியல் சங்கம் கோரிக்கை

கோலாலம்பூர், மார்ச் 25-

மலேசிய இந்தியர் வர்த்தகத் தொழிலியல் சங்கத்தின் மாநில உறுப்பினர்களை மாவட்ட மற்றும் நகராண்மைக் கழக குழு உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும் என மாநில மந்திரிபுசார்கள் மற்றும் முதலமைச்சர்களை அச்சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

சங்க உறுப்பினர்களின் நியமனம் மார்ச் 8 பொதுத் தேர்தலுக்குப் பிறகான மக்களின் விருப்பங்களை நிறைவு செய்வதற்கு நல்வாய்ப்பாக அமையும்.

மாநிலத்திலுள்ள இந்தியர் வர்த்தகச் சபை பிரதிநிதிகளை மாவட்ட மன்றங்கள் மற்றும் நகராண்மைக் கழகக் குழு உறுப்பினர்களாக நியமிப்பதன் வழி இந்தியர் வர்த்தகச் சமுதாயம் தத்தம் பகுதிகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அந்த நிர்வாக அமைப்பு புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

மலேசிய இந்தியர் வர்த்தக மற்றும் தொழிலியல் சங்கத்தில்

10ஆம் பக்கம் பார்க்க

ஹிண்ட்ராப் தலைவர்களை விடுவிக்க

உள்நாட்டு அமைச்சருக்கு திறந்த மடல்

கோலாலம்பூர், மார்ச் 25-

ஐந்து ஹிண்ட்ராப் தலைவர்கள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்று புதிய உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைட் ஹமிட் அல்பாருக்கு நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் சுதந்திரம் சம்பந்தமான முன்னாள் ஐ.நா.வின் சிறப்புத் தூதர் பரம்குமாரசாமி கடிதம் எழுதியுள்ளார்.

விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்த ஐவர் விரைவில் விடுதலை ஆக வேண்டும். இவர்கள் மீதான தடுப்புக் காவல் உத்தரவினை உள்துறை அமைச்சர் மறு ஆய்வு செய்ய வேண்டும்.

ஹிண்ட்ராப்பின் போராட்டம் தற்போது அரசாங்கத்தில் உள்ள மஇகா மற்றும் எதிர்க்கட்சியின் போராட்டத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. சிலாங்கூர் மாநில சட்டமன்ற உறுப்பினராக எம்.மனோகரன் தேர்தலில்

10ஆம் பக்கம் பார்க்க

அரசியல் அமைப்பாக அங்கீகரிப்பீர்

அரசாங்கத்திற்கு வேண்டுகோள்

கோலாலம்பூர், மார்ச் 25-

ஹிண்ட்ராப் தலைவர்கள் ஐவர் இசா சட்டத்தில் கைதாகி நூறு நாட்கள் ஆகிவிட்டன. இம்மாதம் 22ஆம் மற்றும் 23ஆம் தேதி இவர்கள் பற்றி நாடு முழுவதும் நினைவு கூரப்பட்டது என்று ஹிண்ட்ராப் தலைவர் பி.வேதமூர்த்தி பத்திரிகைகளுக்கு அனுப்பிய செய்தியில் தெரிவித்துள்ளார். இவர்கள் கைதாகி தடுப்பு முகாமில் இருப்பது குறித்து உலகளவில் ஆட்சேப கூட்டம் நடத்தப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். மார்ச் 22ஆம் தேதியன்று சான் பிரான்சிஸ்கோ ஐநா பிளாசாவில் ஆட்சேப கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

"இசாவை அகற்றுவோம்" என்று பல்வேறு கருத்தரங்குகளில் பல்லாயிரக் கணக்கான மலேசியர்கள் கலந்து கொண்டனர். எட்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மக்கள் சக்தி மூலம் ஹிண்ட்ராப் அரசாங்கத்திற்கு தெளிவான செய்தியினை அனுப்பியது. ஐம்பது ஆண்டு காலமாக இந்திய சமூகம் ஓரங்கட்டப்பட்டு விட்டது. 2007ஆம் ஆண்டு ஆகஸ்டு 12 ஆம் தேதியன்று பிரதமருக்கு வழங்கப்பட்ட 18 அம்ச கோரிக்கைகளை அரசாங்கம்

10ஆம் பக்கம் பார்க்க

சென்னை செய்தியாளர் கூட்டத்தில் வேதமூர்த்தி.

சுஜாதா மரண விசாரணை 4ஆவது முறையாக ஒத்திவைப்பு

(எஸ்.எல்.இ.மாறன்)

கோலாலம்பூர், மார்ச் 25-

சுஜாதா மரண விசாரணை தொடர்பில் ஒரு கோடி வெள்ளி இழப்பீடு வழங்க வேண்டும் என்று மாணிக்கவாசகத்திற்கு எதிராக போலீஸ் உயர் அதிகாரி தொடுத்த வழக்கு மீதான விசாரணை நேற்று இங்குள்ள ஜாலான் டூத்தாவிலுள்ள பதிவு அதிகாரியின் முன் நடைபெற இருந்தது.

இந்த வழக்கில் கெஅடிலான் கட்சியின் மத்திய செயலவை உறுப்பினர் எம்.மாணிக்கவாசகம் இவரின் சார்பில் வழக்கறிஞர் எம்.மனோகரனும் பிரதிவாதியின் சார்பில் வழக்கறிஞர் செல்வம் சண்முகம், உதவி துணை போலீஸ் கமிஷனர் குமரனும் ஆஜராகி இருந்தனர்.

வழக்கை மாணிக்கவாசகத்தின் வழக்கறிஞர் மனோகரன் மலையாளம் தற்போது உள்நாட்டுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கமுண்டிங் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருப்பதால் அவருக்குப் பதில் மற்றொரு வழக்கறிஞர் எம்.மனோகர் ஆஜராகி இருக்கிறார்.

வழக்கு ஏற்கெனவே மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டிருப்பதால் வழக்கை

10ஆம் பக்கம் பார்க்க

டத்தோ ராஜகோபாலு-இராஜேந்திரன் விவகாரம்

முத்தரப்பு பேச்சு தோல்வி

(செய்தி - துர்க்கா, படங்கள் - தீபன்)

சிரம்பான், மார்ச் 25-

நெகிரி மாநில மஇகா அரசியல் விவகாரத்தில் ஒரு மாதமாக இளைஞர் பிரிவுத் தலைவருக்கும் மாநில தொடர்புகுழுத் தலைவருக்கும் இடையில் நிலவிய மௌன போராட்டம் வெடித்ததனால் நடத்தப்பட்ட முத்தரப்பு பேச்சு எவ்வித முன்னேற்றமும் இன்றி முட்டுக்கட்டையில் முடிந்ததாகத் தெரிகிறது.

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் சிரம்பான், ஜாலான் துங்கு அந்தாவில் அமைந்துள்ள மஇகா தலைமையகத்தில் தேசிய இளைஞர் பிரிவுத் தலைவர்

10ஆம் பக்கம் பார்க்க

வெ.2 லட்சம் அரசு மானியம்

28 இந்திய அமைப்புக்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டதா?

சிரம்பான், மார்ச் 25-

கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைநகர், கோலாலம்பூர் இந்து இளைஞர் இயக்க அலுவலகத்தில் நடைபெற்ற மலேசிய இந்து இளைஞர் பேரவையின் மத்திய செயலவை கூட்டத்தில், பேரவைக்கு இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சு வழங்கிய 2 லட்சம் வெள்ளி மானியத்தை 28 இந்திய பொது அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாக அதன் தேசியத்தலைவர் க.இராசசெல்வன் கூறியிருப்பது கண்டு தாம் அதிர்ச்சி அடைந்ததாக நெகிரி, ராசா ஜெயா இந்து இளைஞர் இயக்கத் தலைவர் இந்துணன் கூறினார்.

28 இந்திய பொது அமைப்புகளுக்கும் அந்த மானியத்தை பகிர்ந்தளிக்க ராசசெல்வனுக்கும் வேந்தனுக்கும் யார் அதிகாரம் கொடுத்தது? தவறு செய்யாவிட்டால் மானியம் பெற்ற இயக்கங்களின் பெயர் விவரங்களை பகிரங்கமாக

10ஆம் பக்கம் பார்க்க